DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -1

| | | |
|---|---|---|
| Name | : திரு. ராஜலிங்கம் | Caste: |
| Father's Name: | திரு. காசிநாதன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 2nd day of January -2024.

**A1 , A2, A5, A7 to A9, A11, A13 to A18 present. A3 produced. A6 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**முதல் விசாரணை**

எனது சொந்த ஊர் அரியலூர் மாவட்டத்திலுள்ள உடையார்பாளையம் தாலுக்காவிலுள்ள வங்குடிகிராமம் ஆகும். எனது வீடு அக்கிராமத்தில் காளியம்மன்கோவில் தெருவில் உள்ளது. நான் தேசிங்குபாலன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு தற்சமயம் சிவகங்கை மாவட்டம் புரசடைஉடைப்பு திறந்தவெளி சிறைச்சாலையில் தண்டனை சிறைவாசியாக இருந்து வருகிறேன்.

ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் எனது கிராமத்தை சேர்ந்தவர்கள் மற்றும் எனது உறவினர்கள். எனக்கும், எனது கிராமத்தை சேர்ந்த தேசிங்குபாலன் என்பவருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. அந்த பிரச்சனை தொடர்பாக எனது குடும்பத்தை சேர்ந்தவர்களை அடியோடு அழித்துவிடுவேன் என்று தேசிங்கு பாலன் சொல்லிகொண்டிருந்தார். எனவே இது தொடர்பாக நான் ஊரில்

பஞ்சாயத்து கூட்டினேன். எங்களது நிலத்தில் சுமார் 1/2 கி.மீ தொலைவு நடந்து தான் தேசிங்கு பாலன் அவரது வயலுக்கு செல்ல முடியும். அந்த பஞ்சாயத்தில் தேசிங்குபாலன் எங்களது குடும்பத்தை அழித்துவிடுவதாக உண்மையிலேயே சொல்லியிருந்தால் அவர் எங்களது நிலத்தின் வழியாக நடந்து அவரது வயலுக்கு போககூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் அந்த பஞ்சாயத்து முடிவுக்கு கட்டுப்படாமல் தேசிங்குபாலன் எங்களது வயலின் வழியாக நடந்து சென்றார். அதனை பார்த்த எனது தகப்பனார் காசிநாதன் தேசிங்கு பாலனிடம் அவர் பஞ்சாயத்து முடிவிற்கு விரோதமாக நடந்து போவதை வாய்மொழியாக கண்டித்தார். அப்போது அந்த இடத்தில் நானும், எனது அண்ணன் தர்மலிங்கமும் இருந்தோம். அப்போது தேசிங்குபாலன் எங்களையும், பஞ்சாயத்தார்களையும் ஒருமையில் பேசினார்.

எனவே எனது தகப்பனார் இதற்குமேல் அவரிடம் பேசி பயனில்லை என்று சொல்லி பஞ்சாயத்தார்களை அழைத்து கொண்டு காவல்நிலையத்திற்கு போகலாம் என்று சொன்னார். அதன்படி நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது தேசிங்குபாலன், ரமேஷ் த.பெ.சக்திவேல், திருஞானம், சுந்தரேசன், கஸ்தூரி, பவுணம்மாள் ஆகியோர் எங்களை மறித்து அரிவாளால் வெட்ட ஆரம்பித்தார்கள்.

அதனால் எனக்கும், என் தம்பி மகாலிங்கத்திற்கும், அண்ணன் தர்மலிங்கத்திற்கும், தம்பி அமிர்தலிங்கத்திற்கும், உறவு முறை சித்தப்பா மகன் ஆன பிரபுக்கும் வெட்டுகாயங்கள் ஏற்பட்டது. வெட்டுகாயங்களுடன் நாங்கள் மீன்சுருட்டி காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்து எங்களை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அன்று நள்ளிரவு நேரத்தில் தேசிங்கு பாலன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனவே எங்களை அனைவரையும் சிறைக்கு அனுப்பி விட்டார்கள்.

சிறையிலிருந்து நாங்கள் பெயிலில் வெளியில் வந்தோம். நாங்கள் வெளியே வந்து பார்த்தபோது எங்களது வீடு, எங்களுக்கு சொந்தமான சுமார் 70 மாடுகள், ரூ.10

லட்சம் செலவு செய்து அமைக்கப்பட்டிருந்த போர்வெல் ஆகியவை எதிரிகளால் அழிக்கப்பட்டுவிட்டது என்பதை தெரிந்துகொண்டோம். இது சம்மந்தமாக காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் புகார்களை அனுப்பி வைத்தேன்.

இந்த சமயத்தில் எங்களது கிராமத்தில் குடியிருக்கும் எதிரிகள் பாரதிதாசன், திருஞானம், காளிதாசன், ரவிச்சந்திரன், பழனிசாமி, தினேஷ், ஜவகர்பாபு, பாஸ்கரன், சிலம்பரசன், திருவாளப்புத்துார் ரமேஷ், விஜய், சுரேஷ், கனகவள்ளி, சசிகலா ஆகியோர் அடிக்கடி கூடி எங்களது குடும்பத்தை அழிப்பது சம்மந்தமாக பேசினார்கள்.

16.05.2008 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் நானும், எனது தம்பிகள் மகாலிங்கம், அமிர்தலிங்கம், எனது பெரியப்பா மகன் சுரேஷ், எனது உறவு முறை சித்தப்பா மகன் பிரபு ஆகியோர் எங்களது ஊரிலுள்ள வண்ணாங்குளத்திற்கு குளிப்பதற்காக சென்றோம். நாங்கள் அனைவரும் குளித்துவிட்டு காலை சுமார் 10.00 மணியவில் திரும்ப வந்துகொண்டிருந்தபோது பால்சாமி மற்றும் சின்னதுரை ஆகியோரது வீடுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் எதிரிகள் சசிகலா, ஜவகர்பாபு, தினேஷ், விஜய், ஸ்ரீதர், காளிதாசன், ரமேஷ் த.பெ.சக்திவேல், பாஸ்கரன், பழனிசாமி, திருஞானம், ரவிசந்திரன் ஆகியோர் நின்று கொண்டிருந்தார்கள். ( சாட்சி எதிரிகளை சரியாக அடையாளம் காட்டுகிறார்)

எங்களை பார்த்தவுடன் எதிரிகள் சசிகலாவும், கனகவள்ளியும் இவர்கள் யாரையும் உயிரோடு விடாதிங்கடா என்று சொன்னார்கள். எதிரி சசிகலா இறந்துபோன தேசிங்கு பாலனின் மனைவி. கனகவள்ளி தாயார். எதிரிகள் திருஞானமும், ரவிச்சந்திரனும் காசிநாதன் குடும்பத்தில் ஒருவரையும் உயிரோடு விட்டுவிடாதிங்கடா அனைவரையும் வெட்டி தள்ளுங்கடா என்று சொன்னார்கள். அதனை கேட்டவுடன் எதிரிகள் தாங்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு எங்களை நோக்கி ஓடிவந்தார்கள்.

வீச்சருவாளுடன் ஓடிவந்த எதிரி ரவிச்சந்திரன் சுரேசின் இடது கை, இடது கை விரல்கள், வயிற்று பகுதி, முகத்தின் வலது புறம் ஆகிய இடங்களில் சரமாரியாக வெட்டினார். எதிரி திருஞானம் தான் வைத்திருந்த பட்டாகத்தியால் சுரேசின் கழுத்து

பகுதியில் ஏறக்குறைய 3 முறை வெட்டினார். முதுகுபுறத்திலும் வெட்டினார்.

பட்டாகத்தியுடன் ஓடிவந்த எதிரி பழனிசாமி, பிரபுவின் முழங்கால் மற்றும் தொடை பகுதியில் வெட்டினார். பிரபு நிலைதடுமாறி நின்று கொண்டிருந்தபோது எதிரி பிரபாகரன் என்பவர் (மைனர்) பிரபுவின் மார்பு மற்றும் கழுத்து பகுதியில் பட்டா கத்தியால் குத்தினார். அதேநேரத்தில் எதிரி பழனிசாமி கண்இமைக்கும் நேரத்தில் பிரபுவின் கழுத்தில் வெட்டி தலையை தனியாக எடுத்து கால்பந்தை உதைப்பதுபோல் உதைத்து தள்ளிகொண்டு சென்றார்.

அதை பார்த்து நானும், என் தம்பிகளும் கூக்குரலிட்டு கொண்டே ஓடினோம். அப்போது என் அப்பா, அம்மா, அண்ணன் தர்மலிங்கம் ஆகியோர் எதிர்திசையிலிருந்து எங்களை நோக்கி ஓடிவந்தார்கள். எனது தாயார் ஜானகி என் மகன்களை யாரையும் வெட்டிவிடாதிங்கடா என்று கத்திகொண்டே ஓடிவந்தார். என் அம்மாவை தள்ளிவிட்டுவிட்டு எதிரி தினேஷ் எனது தம்பி மகாலிங்கத்தின் கைகள், வயிறு, முதுகு, மூக்கு, முகம், தோள்பட்டை போன்ற இடங்களில் சரமாரியாக வெட்டினார்.

எதிரி ராஜதுரை(மைனர்) என்பவர் எனது தம்பி மகாலிங்கத்தின் பின்புறகழுத்தில் பட்டாகத்தியால் பலமுறை வெட்டினார். என்னை வெட்டுவதற்கும் எதிரிகள் சிலம்பரசனும், திருவாளப்புத்துார் ரமேசும் வெட்டுவதற்கு ஓடிவந்தார்கள். அப்போது என் தந்தை காசிநாதன் என் பிள்ளைகளை வெட்டாதிங்கடா என்று சொல்லிகொண்டே அவர்களை தடுப்பதற்காக வந்தார்.

அப்போது எதிரி சிலம்பரசன் தான் வைத்திருந்த பட்டாகத்தியால் எனது தந்தையின் வயிறு, மார்பு, விலா, கை போன்ற இடங்களில் பலமுறை வெட்டினார். எதிரி திருவாளப்புத்துார் ரமேஷ் தான் வைத்திருந்த பட்டாகத்தியால் எனது தந்தையின் கழுத்து, முதுகு, வயிற்று விலாபகுதி போன்ற இடங்களில் வெட்டினார். என் தந்தை குடல் சரிந்து கீழே விழுந்துவிட்டார்.

அதே நேரத்தில் எதிரிகள் ஜவகர்பாபு, காளிதாசன், சுரேஷ், விஜய், ஸ்ரீதர் ஆகியோர் எனது அண்ணன் தர்மலிங்கத்தை சுற்றிவளைத்து அவர் எங்கும் போகமுடியாத படி மறைத்துவிட்டார்கள். எதிரி காளிதாசன் தர்மலிங்கத்தை

எட்டிஉதைத்ததில் நிலைதடுமாறிய தர்மலிங்கத்தை எதிரி பாஸ்கரன் காலில் வெட்டினார். சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலை முதல் பாதம் வரை உள்ள பல பகுதிகளில் சரமாரியாக வெட்டினார். கீழே விழுந்த தர்மலிங்கத்தின் நெஞ்சில் எதிரி காளிதாசன் உட்கார்ந்து கொண்டார். அப்போது எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை வெட்டி தனியாக எடுத்துவிட்டார். தர்மலிங்கத்தின் தலையை எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் என்பவர் காலால் உதைத்து தள்ளிகொண்டு சென்றார்.

என் அம்மா தர்மலிங்கத்தின் உடல்மீது விழுந்து அழுந்துகொண்டிருந்தார். அப்போது எதிரி காளிதாசன் என் அம்மாவை எட்டிஉதைத்தார். அப்போது எதிரி திருவாளப்புத்துார் ரமேஷ் எனது அம்மாவின் வயிறு, தலையின் வலது பக்கவாட்டு பகுதி, மார்பு பகுதிகளில் பட்டாகத்தியினால் வெட்டினார். எதிரி தினேஷ் என் அம்மாவின் உயிர்நிலை பகுதியில் காலால் மிதித்து உன் குடும்பத்தில் அனைவரையும் வெட்டி சாய்த்துவிட்டோமடி இதோடு ஒழிந்துபோங்கள் என்று சொன்னார்.

எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் தர்மலிங்கத்தின் தலையை காலால் உதைத்து சென்று காளியம்மன் கோவில் முன்புறமுள்ள சூலாயுதத்தில் செருகிவைத்தார். எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை உதைத்துசென்று எதிரி தேசிங்குபாலன் இறந்த இடமான எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் என்பவரது வீட்டின் எதிர்புறம் உள்ள இடத்தில் வைத்தார்.

நான் பயந்துகொண்டு மீன்சுருட்டி காவல்நிலையத்திற்கு ஓடிசென்று காவல்ஆய்வாளர் சுப்பையா என்பவரிடம் நடந்த விவரத்தை சொல்லி எழுத்துமூலமான புகார் கொடுத்தேன். அந்த புகார் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.1. காவல் ஆய்வாளர் என்னை ஜீப்பில் ஏற்றி அழைத்துகொண்டு சம்பவ இடத்திற்கு வந்தார். நான் தான் இறந்தவர்களின் உடலை அவருக்கு அடையாளம் காண்பித்தேன்.

ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மண் மாதிரிகளை எடுத்த போது நான் உடனிருந்தேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டாகத்திகள்

மற்றும் வீச்சரிவாள் ஆகியவற்றால் தான் எதிரிகள் தாக்கினார்கள். என்னிடம் காட்டப்படும் சூலாயுதம் தான் நான் மேலே சொன்ன காளியம்மன் கோவிலின் எதிர்புறம் ஊன்றப்பட்டிருந்ததாகும். அதில் தான் என் அண்ணன் தர்மலிங்கத்தின் தலையை எதிரி ரமேஷ்,த.பெ.சக்திவேல் என்பவர் குத்திவைத்தார். அந்த சூலாயுதம் அ.சா.பொ.1. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பி.எஸ்.சி பட்டபடிப்பு திருச்சி ஈ.வே.ராமசாமி கல்லூரியில் படித்தேன். எம்.எஸ்.சி பட்டபடிப்பு தஞ்சாவூர் பொன்னய்யா ராமஜெயம் கல்லூரில் படித்தேன். ஆராய்ச்சி படிப்பை சிதம்பரம் அண்ணாமலை பல்கலைகழகத்தில் படித்தேன். எங்களது குடும்பத்திற்கும், தேசிங்குபாலன் குடும்பத்தினருக்கும் நிலதகராறு இருந்தது என்ற சங்கதியை நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அந்த பிரச்சனை சம்மந்தமாக குற்ற வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பஞ்சாயத்து நடந்த காரணத்தினால் குற்ற வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

அந்த சிவில் பிரச்சனை சம்மந்தமாக புகாரில் நான் எதுவும் சொல்லவில்லை என்றால் அப்போது இருந்த மனநிலையில் என்னால் விரிவாக சொல்லமுடியவில்லை. தேசிங்கு பாலன் கொலை வழக்கில் மொத்தம் 9 எதிரிகள். அதில் நான் முதல் எதிரி. தேசிங்குபாலன் கொலைவழக்கு சம்மந்தமாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

இவ்வழக்கு சம்பவமானது நடைபெற்ற சமயத்தில் நான் தேசிங்குபாலன் கொலைவழக்கு சம்மந்தமாக பிணையில் வெளிவந்து கன்டிசன் கையெழுத்து போட்டுகொண்டிருந்தேன் என்றால் சரிதான். முதலில் 40 நாட்கள் தினசரி கையொப்பம் செய்தேன். பின்னர் சென்னை உயர்நீதிமன்றத்தில் அப்பீல் தாக்கல் செய்து அதில் 10 நாட்களுக்கு ஒருமுறை நான் கையொப்பம் செய்யவேண்டுமென்று நிபந்தனை தளர்த்தப்பட்டது.

எனது வீடு, மாடுகள், போர்வெல் ஆகியவை அழிக்கப்பட்டுவிட்டது என்று நான் சொல்வது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறேன். அந்த புகாரின்

நகலை நான் போலிசாரின் விசாரணையின் போது ஒப்படைத்திருக்கிறேன். அதன் நகலை தற்போது நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தயாராக இருக்கிறேன்.

நான் கொடுத்த புகாரின்பேரில் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் நான் உயர்நீதிமன்றத்தில் முறையிட்டேனா என்றால் உயர்நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேன் ஆனால் தாக்கல் செய்யவில்லை. நான் சொன்னதுபோல் எனது வீடு, மாடுகள், போர்வெல் ஆகியவை எதிரிகளால் அழிக்கப்படவில்லை என்றாலும், அவ்வாறு அழிக்கப்பட்டிருந்தால் நான் என்ன முயற்சி செய்தாவது சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

எனது தந்தை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்த சமயத்தில் அவர் ஊரில் எந்தபொறுப்பிலும் இல்லை. அவர் காளியம்மன்கோவில் தர்மகர்த்தாவாகவும் இல்லை. தேசிங்கு பாலன் ஊராட்சிமன்ற தலைவராக இல்லை. சம்பவம் நடந்த சமயத்தில் நரசிங்கபாளையம் கிராமத்தை சேர்ந்த தேவராஜன் என்பவர் வங்குடிஊராட்சிமன்ற தலைவராக இருந்தார்.

நான் பட்டாளிமக்கள் கட்சியின் மாவட்ட மாணவர்அணி செயலாளராக இருந்தேன். எதிரி திருஞானம் என்பவருக்கு நான் தான் விடுதலைசிறுத்தைகள் கட்சியில் மாவட்ட நிதிசெயலாளர் பொறுப்பு வாங்கிகொடுத்தேன். எதிரி பாஸ்கரன் காங்கிரஸ் கட்சியில் முன்னாள் மாவட்ட SC/ST பிரிவு தலைவராக இருந்தார். எதிரி ரவிசந்திரன் மூப்பனார் கட்சியில் பொறுப்பில் இருந்தார். எதிரி திருவாளபுத்துார் ரமேஷ் என்பவர் விடுதலைசிறுத்தை கட்சியை சேர்ந்தவர்.

நான் தேசிங்குபாலன் கொலைவழக்கு சம்மந்தமாக நிபந்தனை கையொப்பம் செய்துவந்த சமயத்தில் நான் வெளியூரில்தான் தங்கியிருந்தேன் என்றாலும், எனது ஊருக்கே போகவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது கிராமத்தில்தான் தங்கியிருந்தேன். நான் அதிகமாக படித்திருந்தகாரணத்தினால் என்னை காப்பாற்றுவதற்காக எனது குடும்பத்தினரே என்னை வெளியூரில் தங்க

வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல.

நாங்கள் வழக்கமாக வண்ணாங்குளத்திற்கு தான் குளிப்பதற்காக போவோமா என்றால் பைப்பில் தண்ணீர் வராதநாட்களில் அங்கு சென்று குளிப்போம். சம்பவதினத்தன்று பைப்பில் தண்ணீர் வராதகாரணத்தினால் தான் வண்ணாங்குளத்திற்கு குளிக்க சென்றோம் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நாங்கள் எத்தனை மணிக்கு அந்த குளத்திற்கு குளிக்க சென்றோம் என்றும், எத்தனைபேர் சென்றோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

எனது வீட்டிலிருந்து முக்கால் கி.மீ தொலையில் மேற்படி குளம் அமைந்துள்ளது. சம்பவதினத்தன்று நான் மேற்படி குளத்திற்கு குளிப்பதற்கு போகவே இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் உண்மையிலேயே இவ்வழக்கு கொலைகளை செய்திருந்தால் அவர்கள் அக்குற்றத்தை ஊருக்கு வெளிபுறமாக உள்ள மேற்படி குளத்திற்கு அருகில்வைத்து தான் செய்திருப்பார்கள் என்றாலும், கிராமத்திற்குள்ளாக வைத்து செய்திருக்கமாட்டார்கள் என்றாலும் சரியல்ல.

6 ஆம் எதிரி என் தாயாரை வெட்டியதாகவும், அதனை நான் பார்த்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு வயிறு, மார்பு, வலது பக்கவாட்டு தலை ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டதாக தற்போது தான் நான் முதல்முறையாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும், அதனை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

நான் சொன்னது போல் என் தாயாருக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு என்ன உறவுமுறைவேண்டுமென்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். ஆனால் புகாரில் சொல்லவில்லை. சம்பவம் நடந்து முடிந்து சுமார் அரைமணி நேரம் முதல் முக்கால்மணிநேரத்தில் நான் காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டேன். நான் காவல்நிலையத்தில் 5 பேர் சம்பவஇடத்திலேயே இறந்துவிட்டதாகத்தான் சொன்னேன். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் தான் எழுதினேன்.

என் தகப்பனார் மற்றும் சகோதரர்கள் இறந்த பதைபதைப்பில் இருந்த நான் புகாரில் சொல்லப்பட்டதுபோல் தெளிவாக எழுதியிருக்க முடியாது என்றால் சரியல்ல. பிரபு மற்றும் தர்மலிங்கம் ஆகிய இருவர் மட்டும் தான் இறந்துவிட்டதாக புகாரில் சொல்லியிருக்கிறேன் என்றாலும், மற்ற மூவரும் இறந்துவிட்டதாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் புகாரை கொடுக்கவில்லை என்பதால் தான் 5 பேர் இறந்துவிட்டதாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் குறுக்குவழியில் சென்றால் 5 முதல் 7 கி.மீ தொலைவு. நான் அந்த வழியாகத்தான் காவல்நிலையத்திற்கு சென்றேன். என்னுடன் வேறுயாரும் வரவில்லை. நான் காவல்நிலையத்திற்கு போகவில்லை என்றாலும், புகார்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 5 கொலைகள் நடந்துள்ள நிலையில் நான் மட்டும் தனியாக காவல்நிலையம் போவதற்கு சாத்தியகூறு இல்லை என்றால் சரியல்ல.

கட்சி ரீதியாக எங்கள் குடும்பத்திற்கு நிறைய எதிரிகள் இருக்கிறார்கள் என்றாலும் அவர்களில் யாரோ தான் மேற்கண்ட கொலைகளை செய்திருக்கிறார்கள் என்றாலும், எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் இருந்த முன்விரோதத்தை காரணமாக கொண்டு போலிசார் பொய்யான புகாரை தயார்செய்து வெளியூரில் இருந்த என்னை வரவழைத்து புகாரில் கையொப்பம் மட்டும் பெற்றுள்ளார்கள் என்றாலும் சரியல்ல. 6 ஆம் எதிரி சம்பவஇடத்திலேயே இல்லை என்றாலும் அவர்மீது எனக்குள்ள முன்விரோதத்தின்காரணமாக அவருக்கு எதிராக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

சம்பவஇடத்தில் நான் இல்லை என்பதால் தான் எனக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அப்படி இருந்திருந்தால் நான் சம்பவத்தை தடுப்பதற்கு முயற்சித்திருப்பேன் என்றாலும், அப்படி இருந்தால் எனக்கு சிறுகாயமாவது ஏற்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல.

**8 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

8 ஆம் எதிரிக்கும், எங்களது குடும்பத்திற்கும் இடையே முன்விரோதம் இருந்ததாக புகாரிலும், போலிசார்விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அப்படி சொல்லியிருப்பதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 8 ஆம் எதிரி என்னையும், என் குடும்பத்தினரையும் திட்டிவந்தார் என்று நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். 8 ஆம் எதிரி எனது குடும்பத்தினரை அழிப்பதற்காக மற்ற எதிரிகளுடன் சேர்ந்து திட்டம்தீட்டினார் என்று நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

தர்மலிங்கத்திற்கு காலில் வெட்டுகாயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இறந்த 5 நபர்களும் வெவ்வேறு இடங்களில் இறந்துகிடந்தார்கள் என்பதால் சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 8 ஆம் எதிரி வேறு ஒரு அரசியல்கட்சியை சேர்ந்தவர் என்பதால் அவர்மீதுள்ள அரசியல்பகையின் காரணமாக அவரை பொய்யாக வழக்கில் சேர்ந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 8 ஆம் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>13 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

13 ஆம் எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து எனது குடும்பத்தை அழிப்பதாக பேசிக்கொண்டிருந்தார் என்று நான் சொல்வது சம்மந்தமாக காவல்நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார்எதுவும் கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தபோது என்ன சங்கதிகளை சொன்னேனோ அதே சங்கதிகளை தான் முதல்விசாரணயில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை என்றைக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த தினத்தன்று எனது கிராமத்தில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் பலமுறை பலஅதிகாரிகள் விசாரித்தார்கள். தொடர்ந்து 5 தினங்கள் என்னை விசாரித்தார்கள்.

எனது கிராமமானது கீழ்பகுதி, மேல்பகுதி, நடுபகுதி, உறவுமுறை என்று நான்கு பகுதிகளாக இருக்கிறது. நடுபகுதியில் தச்சர் இனத்தவர் இருக்கிறார்கள் என்றால்

சரியல்ல. ஒரே சமுதாயத்தை சேர்ந்த அதாவது பறையர்சமுதாயத்தை சேர்ந்தவர்கள் தான் அங்கு இருக்கிறார்கள்.

நான் கீழ்பகுதியை சேர்ந்தவன் என்றால் சரிதான். எதிரி திருஞானம் மேல்பகுதியை சேர்ந்தவர். எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் மேல்பகுதியை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. உறவுமுறை பகுதியை சேர்ந்தவர். எதிரிகள் பாஸ்கரன், ரவிச்சந்திரன் ஆகியோர் தச்சர் இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. அவர்களும் பறையர்இனத்தை சேர்ந்தவர்கள் தான்.

எங்கள் ஊரில் ஒரு காளியம்மன் கோவில் இருக்கிறது. அந்த காளியம்மன் கோவிலுக்கு வரிகொடுப்பதற்கு தங்களையும் சேர்த்து கொள்ளவேண்டுமென்று நடுபகுதியில் வசிக்கும் தச்சர் இனத்தை சேர்ந்தவர்கள் கேட்டுகொண்டார்கள் என்றால் அவர்கள் பறையர்இனத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் அவ்வாறு கேட்டது உண்மைதான். அவர்களை அவ்வாறு சேர்க்ககூடாது என்று எங்களது குடும்பத்தினர் ஆட்சேபித்தோம் என்றால் சரியல்ல.

அவர்களையும் கோவிலில் சேர்த்துகொள்ளும்படி தேசிங்குபாலன் ஆதரவு தெரிவித்தார் என்றால் சரியல்ல. எங்களுக்கு ஊரில் வேறு எதிரிகள் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எதிரி பாரதிதாசன் காட்டுமன்னார்கோவிலில் வசிக்கிறார். வழக்கு சம்பவத்திற்கு 15 வருடங்களுக்கு முன்பிருந்தே அவர் காட்டுமன்னார்கோவிலில்தான் வசிக்கிறார். வாரத்திற்கு இரண்டு முறை அவர் ஊருக்கு வந்துசெல்வார் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

எதிரி பாரதிதாசன் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக வேலை செய்கிறார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பாகவே அவர் மேற்படி வேலையில் சேர்ந்துவிட்டார் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று நான் ஊரில் இல்லை என்றாலும், சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரி பாரதிதாசனுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

எதிரி பாரதிதாசன், 2 ஆம் எதிரி திருஞானத்தின் சகோதரர் என்பதால் அவரையும்

இந்த வழக்கில் பொய்யாக சேர்த்து புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எதிரிகள் 2, 7, 11, 14 முதல் 17 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.பி.சத்தியமூர்த்தி ஆஜர். இன்று வக்காலத்து தாக்கல் செய்திருக்கிறார். குறுக்கு விசாரணையை நிறுத்திவைக்க கோரி மனுதாக்கல் செய்து அது நிராகரிக்கப்பட்டது.

எதிரிகள் 1, 5, 9 மற்றும் 18 தரப்பிலும், 3 ஆம் எதிரி தரப்பிலும் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.